தேவாரத் திருப்பதிகங்கள்

(இராக ஸ்வர தாள அமைப்புடன்)

இவை

தேவார திருப்புகழ் வித்வான்

புதுவை-ஆ. விநாயக முதலியார்

அவர்களால்,

இராக தாள அளவுக்குறிப்புடன்

ஸ்வரப்படுத்தப்பட்டன.

உ
சிவமயம்

தேவாரத் திருப்பதிகங்கள்

(இராக ஸ்வர தாள அமைப்புடன்)

(முதற்பாகம்)

இவை

தேவார திருப்புகழ் வித்வான்

புதுவை. ஆ. விநாயக முதலியார் அவர்களால்

இராக தாள அளவுக்குறிப்புடன் ஸ்வரப்படுத்தப் பட்டன.

1943

0-12-0

To

The Rajah Sir S. R. M. Annamalai Chettiar of Chettinad, LL.D., D. Litt.,

Patron of Tamil Learning
and
Founder of Annamalai University,

This little volume forming the first part of "Devara Thiruppathikangal set to Music to suit the needs of the Modern Times"

is

most respectfully dedicated, in token of the gratitude, esteem and admiration for all the splendid work he has done with a view to uplift the language, arts and culture of the Tamil land.

A. Vinayaka Mudaliar,
The Author.

முகவுரை

'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' என அருண்மொழித் தேவராற் சிறப்பிக்கப்பெற்ற அமிழ்தினும் இனிய நற்தமிழ் மொழிக்கண் இயற்றமிழ்போலவே இசை நாடகங்களும் பண்டு பெருக்கமடைந்திருந்தன; அன்றியும், அவை தமக்கேயுரிய சிறப்பியல்புகள் உடையனவாயுமிருந்தன. இவ்வுண்மை சிலப்பதிகாரம் முதலியவற்றானும், அவற்றின் உரைகளானும் நன்கு விளங்கும். இடைக்காலத்தே திருநெறித் தலைவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்றின்ன அருளாசிரியன்மார்களால் தமிழிசையும், அதன் பயனாஞ் சிவநெறியும் ஒருங்கே வளர்க்கப்பெற்றுப் பாதுகாக்கப்பெற்றன. "நாளுமின் னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தனுக்கு உலகவர் முன், தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்குந் தன்மையாளனை" என்றது அறியற்பாலது. இவ்வருளாசிரியன்மார்கள் பாடியருளிய தேவாரம் முதலிய திருப்பாடல்கள் நம்மனோரையும் ஈடேற்றும்பொருட்டு, உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மை நற்பொருளை இன்சொற்படுத்தியும் இன்னிசைப்படுத்தியும், முழுமுதற் கடவுளைப் பரவு முகத்தான் அருளப்பெற்றவை. ஆகலின் இத்திருப்பாடல்களை, இசையியலறிந்து இசை (சுர) தாள அமைப்புடன் நன்கு பாடப் பழகுதலும், அங்ஙனம் பாடவல்லோரையே தம் இல்லங்களிலும், பொது நிலையங்களிலும் அவ்வப்போது அமைக்கப்படும் இசைப் பேரரங்குகளில் வருவித்துப் பாடுவித்து இன்னிசைகேட்டலும், தமிழ் மக்கள் யாவரும் தமக்கே சிறப்பாக உரிய இசைக்கலை நாகரிகத்தை அழியாமற் பாதுகாத்தற்பொருட்டுச் செய்யற்பாலனவாகிய இன்றியமையாக் கடப்பாடுகள் ஆகும்.

இக்காலத்து, நந்தமிழ்நாட்டில், இசையரங்குகளில், தேவார முதலிய தெய்வ அருட்பாடல்கள் பாடப்பெறுவதில்லை; அன்றியும் அவற்றைப் பாடுவோர் மாட்டும் அவை தம் ஒளியிழந்து, பொலிவிழந்து, புகழிழந்து, பெருமையிழந்து, பொதுமக்கள் உள்ளத்தைப் பிணிக்காதனவாய்க் காணப்படுகின்றன. மிகச் சிறந்தனவாகிய அவ்வின்னிசைச் செந்தமிழ்ப் பாக்கள் இங்ஙனம் இசையுலகில் சீர்த்தி குன்றி நின்றதற்குக் காரணம், அவற்றை இக்காலத்து ஓதுவோர் இசை இலக்கண வரம்பு அறியாதவர்களாய், பிறர் பாடக்கேட்டுத் தாமும் அங்ஙனமே பாட முயல்வோராய், பாடும் போது நேரும் இசைவழுக்களை (அவசுரங்கள் வந்து கலத்தலை)க் களையாதவராய் இருத்தலும், இசையியலறிஞர்களையும், பொது மக்களையும் இன்புறுத்தும் பல்வேறு வகை இசை (சுர), தாள அமைப்புக்களுள் ஏற்பன தழுவிப் பாடமாட்டாமையும் ஆம். தேவாரம் முதலியன ஓதுவோர் பலரும், பெரும்பான்மைபற்றிச் சொல்லின், இசையறிவு பெறாதவராகவே (சுரஞானம் இல்லாதவர்களாகவே) காணப்படுகின்றனர். இயற்றமிழிலக்கணமறியாதான் ஒருவன், தான் தமிழிலக்கிய முற்றினும் உணர்ந்தேன் என்பனாயின் அவனறிவைப் பாராட்டுவார் யார்? "எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்—எழுத்தறிவார்க் காணின் இலையாம்" அன்றே? *நூல்களைக் கல்லாதவனது அறிவுடைமை யொரோவழி மிக நன்றாக விருப்பினும், அதுபற்றி அவனை நிலைபெற்ற நூலறிவுடையோர் மதியார் என்றன்றே பொதுமறை புகல்கின்றது? அங்ஙனமே இசையறிவு (சுரஞானம்) பெறாதான் ஒருவன் இசை வல்லேன் எனின் அதனை இசையியலறிந்தோர் எங்ஙனம் பொருட்படுத்துவர்? அவர்தம்மாற் பாடப்படும் பண், பண் ஆதல் யாங்ஙனம்? ஆசிரியர் திருவள்ளுவனார், "பண் என்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும், கண்ணோட்ட மில்லாத கண்" என்றருளிச் செய்தது ஈண்டறியற்பாலது.

---

*'கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடையார்.' —திருக்குறள் ௪0௪

இனி, இக்காலத்து இசையறிவு பெருமைபற்றி, தேவாரத்தை ஓதுவோர் பலரும் பாடும்போது நிகழும் பிழைகள் சில ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றன:—

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிச்செய்த 'போகமார்த்த' என்னும் பதிகத் திருப்பதிகத்தைப் பாடும்போது,

"போகமார்த்த பூண்முலை யா அ அ அள், யா அ அ அள்
பத நி த பா பத நி த பா
அ அ அ அ அ அ"
ப த நி த ப ம

என அகாரம் கொடுத்து முடித்து, மீளப் "போகமார்த்த" எனத் தொடங்கிப் பாடுகிறுர்கள். இதன் பண் "பழந்தக்கராகம்"; அதாவது 'சுத்தசாவேரி'. சுத்தசாவேரியின் ஆரோசை அமரோசை ஒழுங்கு (ஆரோகண அவரோகணக் கிரமம்) "ச ரி ம ப த ச; ச த ப ம ரி ச" என்பதாகும். இதில் 'நி' என்ற சுரம் இல்லை. ஆனுல் பாடும் முறையில் அகாரங்கொடுக்கும் போது 'நி' என்னுஞ் சுரம் கலந்தே வருகின்றது. இது தவறு.

"அடுத்தானை யுரித்தானை" என்னும் பாடல் எதுகுலகாம்போதி, காம்போதி என்னும் இரு ராகங்களும் இடையிடையே கலந்து வருமாறு பாடப்படுகிறது.

இத்தகைய பிழைகள் மலிய இசையியல் வரம்பறியாதுபாடுதல் இசையியலறிந்தோரால் எங்ஙனம் மதிக்கப்படும்?

சுரங்கள் எனப்படும் ஏழிசைகளை (ச ரி க ம ப த நி) யும் மாறுந்திறத்தினுலேயே பல்வேறு வகைப்படப் பண்கள் (இராகங்கள்) தோன்றுகின்றன. ஆகலின் சுரங்களைப்பற்றிய செய்திகளை யறிந்து, இன்ன இராகத்திற்கு இன்ன சுரவரிசை யமைப்பு என உணர்ந்து பயின்று பாடப்படுவதே பண் ஆகும். இக்கருத்துப் பற்றி யன்றே சுந்தரமூர்த்தி நாயனுர் இறைவன் இசைவடிவினனுதலை யுணர்த்துகையில், "ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய்" என்றருளிச் செய்வாராயினர். ஈண்டு ஏழிசை என்றது

சரிகமபதநி என்னும் எழுத்துக்களைக் குறியீடுகளாக உடைய ஏழ் சுரங்களே. இவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் பெயர்களால் தமிழ் நூல்களில் வழங்கப்படும். "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வெனும், இவ் வேழெழுத்தும் ஏழிசைக்குரிய" என்பதனாலும்,

'சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
ஏழிசையுந் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ் முதலாஞ் சுத்தத் துணை'

என்பதனாலும் சுரங்களை அடிப்படையாகக் கொண்டு பண்கள் அல்லது இராகங்களை எழுப்புதற்குக் கருவிகளாக ஆ முதலிய நெட்டுயிர் ஏழினையுமே யன்றி, சரிகமபதநி என்னும் ஏழ் எழுத்துக்களையும் நந்தமிழ் மக்கள் கொண்டனர் என்பது விளங்கும். இசை, இசைப்பாயன் என்றது அவ்விசை (சுரங்) களான் இயன்ற பண்ணும் பாடலும் முதலியவற்றை. இதனால், தமிழ்ச்சொற்கள் உயிரும் மெய்யுமாகிய முப்பது முதலெழுத்துக்களானும் சார்பெழுத்து மூன்றனும் இயலுமாறு போல, பண்கள் (இராகங்கள்) ஏழிசைகள் எனப்படும் சுரங்களானேயே இயலும் என்பதும், எழுத்துக்களின் பிறப்பும் மயக்கமும் முதலிய இயல்பறிந்தோரே சொற்களையும் சொற்றொடர்களையும் வழங்க வல்லோராதல்போல இசையியலறிவு (சுர ஞானம்) பெற்றோரே பண்களைப் பாடவல்லோராவர் என்பதும் இனிது விளங்கும்.

பண்டைக்காலத்து ஆண்மையும் அழகும் வீரமுஞ் செறிந்த நந் தமிழிளங் குமரர்கள் இயற் றமிழையும் இசைத் தமிழையும் அவற்றின் இலக்கண வரம்புணர்ந்து வருந்திக்கற்றுப் பேரின்பம் எய்தி வந்தனர் என்பதை இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட செந்தமிழ்த் தெய்வத் திருநெறித்தலைவர் மாணிக்கவாசகப்பெருமான் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலின்கண் இனிது விளக்கியருளுகின்றார்:— இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து ஆற்றுவித்துப்

பிரிந்த தலைமகன், தான் பிரியும்போது தலைமகட்கு உரைத்தவையெல்லாம் நினைந்து ஆற்றா நிலைமையனாய், தனக்குச் சிறந்தானாகிய தன் காதற்பாங்கனைக் கண்டு தன் பரிசுரைத்துப் பின்னும் தலைவியைச் சென்றெய்த எண்ணி, அவன் இருந்துழிச் செல்கின்றான். அங்ஙனந் தன்னை நினைந்து வாராநின்ற தலைமகனைத் தலைப்படுகின்றான் பாங்கன். தலைப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கினான். இளமுலை ஞாயிற்றின் வனப்பழித்த தலைமகன்றன் றிருமேனி ஒளி மழுங்கித் தோள்கள் மெலிந்து வாட்டமுற்றிருப்பக் கண்டு பொருளாய், உற்றது உணரவேண்டி "என்னை கொல்லோ எம் பெருமாற்கு இற்றை வேறுபாட்டு வாட்டம்!" என்கின்றான்:—

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ! அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ!
இறைவா! தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே"

எனவரும்.

இதன் பொருள் வருமாறு: இறைவனே, தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணும் என் நெஞ்சினிடத்தும் ஒப்பத்தங்கும் முதல்வனது கூடற்பதியின் கண்ணே ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் அகமும் புறமுமாய பொருட்கூறுகளிடத்து நுழைந்தாயோ? அன்றி ஏழிசைகளானியன்ற பண்ணும் பாடலும் முதலாயின வற்றின்கண் புகுதலானோ? பெரியவரை போலும் நின்றோள்கட்கு மெலிவப் புகுந்தெய்தியதென்னோ? எனப்பாங்கன் தலைமகனை வினவியதாம்.

இசையின் மாட்சிதான் என்னே! உலகியல் சிறிதும் அறியாத மகவும், கொடிய விலங்கினங்களும் நச்சுயிர்களும் அல்லவோ இனிய இசையைக் கேட்ட அளவானே தந் தொழில் மறந்து இன்புற்றுத் தன்வயமழிந்து இசைவயத்த ஆகின்றன! இசையானது உயிருணர்வை யெழுப்பி இன்பம் பயப்பதொன்றாய் ஒப்புயர்வற்று நிலைபெறுவதொன்றாகும்.

இத்தகைய இன்னிசையை ஏற்றபெற்றிப் பல்வேறு திறப்படத் தழுவித் தேவாரம் முதலிய தெய்வச் செந்தமிழ் மறைப் பாடல்களை

இசையியலறிந்தோர் மதிக்கத்தக்க முறையில் பாடி, நந்தமிழ் மக்களை இன்புறுத்தும் வாயிலான், தமிழ் மொழியினையும், சிவபெரான் பொருந் திரு நெறியினையும் விளக்கஞ் செய்தற் பொருட்டு, சில தேவாரத் திருப்பதிகங்களுக்கு, இசையியல் வரம்புக்கிணங்க, இராக, சுர, தாள அமைப்புக்களை அவ்வப்பதி கங்களின் சொல்லமைப்புக்கும் பொருளொழுங்கிற்கும் பொருந்து மாறறிந்து இந் நூலின்கண் தருகின்றேன். இதனை அறிஞர் உலகம் பெற்றுக் குணங்கொண்டு பாராட்டும் என்னும் நம்பிக்கையுடையேன். இது முற்றமாறு என்னறிவின்கண் நின்று உதவிய சிவபிரான்றிருவருளை வழுத்துகின்றேன்.

இதனை வெளியிடுதற்கண் எனக்கு உசாத் துணையாயிருந்து பல்வகையாலும் உதவிபுரிந்ததனோடு, இதற்கு மதிப்புரையொன்றனையுந் தந்த, தேவார ஆராய்ச்சியாளரும், தமிழிசை நூலாசிரியருமான T. A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் அவர்கட்கு எனது நன்றி என்றும் உரியதாகும்.

தமிழிசைக்குப் பேராதரவு அளித்துவரும் வள்ளல், செட்டி நாட்டரசர், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குத் தமிழிசையுலகம் பெரிதும் கடப்பாடுடையதாகும்; அவ்வியையு பற்றி அவர்தமக்கு என்றன் உளமுவந்த நன்றியறிவை ஈண்டுத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை நன்முக அச்சிட்டு உதவிய தமிழ்க்கலை அச்சகத்தின் செயலாளரான உயர்திரு. S. காளப்ப முதலியார் அவர்கட்கு எனது நன்றியுரியது.

என் அறிவு சென்ற அளவில், யான் பல ஆண்டுகளாகத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடிவந்த பயிற்சியின் பயனாக, அவற்றிற்கு இசை தாள அமைப்புக்கள் இந்நூலின்கண் தரப்படுகின்றன. இந்நூலை ஆதரிக்குமாறு இசைவாணர்களையும் மற்ற அன்பர்களையும் பெரிதும் வேண்டுகின்றேன்.

காஞ்சிபுரம்,
2-8-43.

இங்ஙனம்,
தேவாரம்-ஆ. விநாயக முதலியார்.



தேவார திருப்புகழ் வித்துவான்

புதுவை-ஆ. விநாயக முதலியார் அவர்கள்

பச்சையப்பன் உயர்நிலைக் கல்விக்கூடக்
கணித, ஆங்கில ஆசிரியர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
உயர் சைவத்திருவாளர்
க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., அவர்கள்
தந்த

மதிப்புரை

கண்ணகன் ஞாலத்தே மக்களாகப் பிறந்தார் பலரும் முயன்று அடைதற்குரிய பேறு பலவற்றுள்ளும் 'சிவம்' எனப்படும் முழுமுதற் பெரும்பொருளின் திருவருட்பேறே தலைசிறந்ததாகும். அப்பேறும் சிவபிரான் திருவடிக்கண் செய்யும் இடையறாப் பேரன்பானேயே உளதாம். முதல்வன் திருவடிகளில் எல்லையில்லாத அன்பை வளர்த்தற்குக் கருவி இசையின் மிக்கது பிறிதொன்றில்லை.

சிவபிரான் பேரருட்டிறனை விளக்கி, மெய்யன்போடு அகங்கரைந்து ஓதுவார்க்கு, இம்மை, மறுமை, வீடென்னும் மும்மைப் பெரும்பயனையும் எளிதின் எய்துவிக்கும் பெருமந்திரங்களாகிய தேவாரத் திருப்பதிகங்களை, இசைநூற் பயிற்சியுடையோர், பொய் கடிந்து புலவுத் துறந்த அருளொழுக்கினராய், ஏழிசைகளின் முறை வழுவாது, பண்களின் திறன் அறிந்து, அவ்வத் திருப்பதிகத்திற்கு ஏற்ற பண்ணோடு அகங்குழைந்து ஓதுதல், ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் சிவபிரான்மாட்டு அன்பை வளரச் செய்யும். "அளப்பிலை கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம்

அருளுமாறே" எனவும், "உறவாகி இன்னிசை கேட்டு இரங்கி மீண்டே உற்றபிணி தவிர்த்தருள வல்லான்றன்னை" எனவும் எழுந்த திருவாக்குக்கள், இறைவன் தன்னை இன்னிசையோடு பாடும் அன்பர்க்கு எல்லையில்லாத திருவருளைச் சுரத்தலை நன்கு விளக்குகின்றன. இதனை உளத்திற் கொண்டு, தேவார திருப்புகழ் சங்கீத வித்துவான் புதுவை-ஆ. விநாயக முதலியார் அவர்கள், இக்காலத்து இசைப் பேரறிஞர்கள் தெலுங்கு முதலிய வேற்றுமொழிப் பாடல்களில் அமைத்துப் பாடும் சங்கீத முறையில் தாம் பயின்ற பயிற்சியின் பயனாக, தேவாரத் திருப்பதிகங்கள் பலவற்றிற்கு இசை தாளத் திறன்களை ஏற்குமாறறிந்து அமைத்து ஒரு நூலாகத் தமிழிசையுலகிற்கு அளிக்கின்றார்கள்.

திருநெறித் தமிழ்த் திருப்பதிகங்களுக்குத் திருவருள் வழி நின்று சான்றோர் வகுத்த பண்முறை இக்காலத்து ஐயமின்றித் தெளியப்படாமையாலும், அறிஞர் சிலர் அவைபற்றி யாராய்ச்சி செய்துள்ளாராயினும் அவ்வாராய்ச்சி இன்னும் முற்றுப்பெறாமையாலும், தொன்மை முறைவரும் மரபுபற்றிப் பாடக்கடவோர் தாமும் காலத்திற் கேற்பச் சில பல பண் முறைகளை மாற்றிப் பாடுப ஆகலானும், "கடிசொல் இல்லை காலத்துப் படினே" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதுபோன்றதொரு காரணம்பற்றி இந்நூலை அறிஞர் உலகம் ஏற்கற்பாற்று.

அன்றியும், இந்நூலின் முன்னுரையிற் காணுமாறு, இக்காலத்துத் தமிழிசையைப் போற்றுவம் என்பார் பலரும் இசைப் பேரரங்குகளில் தேவாரத் திருப்பதிகங்

களுக்கு முதன்மை தாராமை மிகவும் வருந்தத்தக்கது. இது தமிழ்மக்களின் தெய்வக்கலையுணர்ச்சிக்கு என்ஞான்றும் நீங்காததோர் இழுக்காய் முடியும். மொழிக்குமொழி தித்திக்கும் மூவர் பாடல்களைப் பொதுமக்களிடையே, "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே—செல்லும் வாயெல்லாஞ் செயல்" என்னும் பொது மறைக் கிணங்கப் பரப்பவேண்டுவது தலையாய அறிஞர்தங் கடமையேயாம். இந்நூலிற் காணும் முறைப்படி, இசையறிஞர்கள் திருப்பதிகங்களை இசைப் பேரரங்குகளிற் பாடப்புகுவரேல் இத்திருவருட்பாக்கள் பொதுமக்கள் உள்ளத்தில் தலைமைத் தானம் பெற்று அரசு வீற்றிருப்ப, ஏனைப் பொருளற்ற இழுக்குடைய பாட்டுக்கள் தலை மறைந்து தாம் இருக்கத் தக்க இடஞ் சென்று ஒடுங்கும் என்பதில் ஐயம் இல்லை; தமிழ்ப் பெருமக்கள்தம் இன்னிசையுணர்ச்சியும் அன்றே விழுப்பம் உடையதாகும்.

இனி, இந்நூலை இங்ஙனம் ஆக்கி வெளியிடும் திருவாளர் முதலியார் அவர்களைப்பற்றிச் சிலசொற்கள்:- திருவாளர் முதலியார் அவர்கள் இந்நூலிற் காணும் முறைப்படி சில பாடல்களைப் பாடக் கேட்டுள்ளேன். அவர்கள் பாடும் முறை இசையியல் நிறைந்து, பாடல்களின் பொருளொழுங்கைச் செவ்விதின் விளக்கி, அவற்றின் பெருமித நடை தோற்றி, உயிருணர்வை எழுப்பி இன்பம் பயக்கின்றது. அவர்களாற் போதிக்கப்பட்ட, காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் தேவார திருவாசக பாடசாலை மாணவர்கள் சில பண்களை இம்முறைபற்றிச் சென்ற பங்குனி உத்திரப் பெருவிழாவிற் பாடக் கேட்ட நல்லிசைப் புலமை வாய்ந்த சான்றோர் ஒருவர் அம்முறை மிகவும்

செவிக்கின்பம் பயத்தலையுணர்ந்து பாராட்டவுங் கண்டுள்ளேன். இந்நூன்று திரு. முதலியாரவர்களைப்போன்று தேவாரத் திருப்பதிக முதலியவற்றையும் திருப்புகழ்ப் பாடல்களையும் பல திறப்பட்ட இசை தழுவி, இசைப் பேரறிஞர் மதிக்கப் பாடி இன்புறுத்தவல்லவர் மிக, மிக அரியர் என்றே சொல்லலாகும். அவர்கள் அம்மை தழுவக் குழைந்த எந்தை ஏகம்பன் திருவருளால் நீடினிது வாழ்ந்து திருவருளின் அபரதடத்த வடிவத் திருப்பதிகங்களை மக்களிடைப் பரப்பி இன்புறுத்துவாராக.

இங்ஙனம்:

காஞ்சிபுரம்,
புரட்டாசி ௩,
சுபாநு.

க. வச்சிரவேல் முதலியார்,
செயலாளர்,
மெய்கண்டார் கழகம்.

தேவார ஆராய்ச்சியாளரும், தமிழிசை நூலாசிரியருமான
வித்வான் வேலூர் T. A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார்
அவர்கள் அளித்த

மதிப்புரை

பண்டைக்காலத்தில் நந்தமிழகத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூவகை நூல்களும் நிரம்பியிருந்தனவென்பது பழந்தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது. பண்டைய தமிழிசை நூல்களான முதுநாரை, முதுகுருகு, இசை நுணுக்கம், பஞ்ச பாரதீயம், தாள நுணுக்கம், கூத்து நூல் முதலியன பல காரணங்களால் அழிந்துபோயின. மறைந்தவை போக எஞ்சியிருக்கும் சிலப்பதிகாரம்போன்ற பழைய நூல்கள் பழந் தமிழர்களின் இசைத் திறமையை விளக்குகின்றன. இஞ்ஞான்று இசை இலக்கியங்களான தேவாரமும், தாள இலக்கியங்களான திருப்புகழ் போன்றவைகளும் இருக்கின்றன. தேவாரத் திருப்பதிகங்களை அக் காலத்துத் தமிழர்கள் மிகத் திறமையோடு பாடிவந்ததை வட மொழியில் பிரதானமாக உள்ள சங்கித ரத்னாகரம் என்கின்ற இசை நூலானும், திருமுறைகண்ட புராணத்தானும் அறிதல்கூடும். திருமுறைகண்ட புராணமுடையார் கூறும் அதிகமான பண்களின் வகைகளுக்கும், பிங்கலந்தையில் கூறும் 103 பண்களுக்கும், இக்காலத்து வழங்கிவரும் 24 பண்களுக்கும் (இராகங்களுக்கும்) மிகவும் வேறுபாடு காணப்படுகின்றது. திருமுறைகண்ட புராணம் பிங்கலந்தை முதலிய நூல்களிலுள்ள அதிகமான பண்களின் நுட்பங்களை உணரமுடியாமையால் பழமையாகத் தமிழ்நாட்டில் வழங்கிவந்த தேவாரப் பண்களைப் பிற்காலத்தவர் தத்தம் விருப்பம்போல் வெவ்வேறு பெயர்கொடுத்துப் பாடிவருவாராயினர்.

உதாரணமாக:— திருத்தாண்டகத்தை பியாக்கட இராகத்தில் பாடவேண்டும் என்று ஒரு சிலர் தெரிவிக்கின்றனர்; வேறு சிலர் அதனை அரி காம்போதி ராகத்தில் பாடவேண்டுமென்கின்றனர்.

மற்றுஞ் சிலர் அதனைத் திருத்தாண்டகத்திலேயே பாடவேண்டும் எனப் பொருள் விளக்கமின்றிக் கூறுகின்றனர். இன்னுஞ் சிலர் திருத்தாண்டகம் என்பதற்கு வேறு பொருள் உளதென்று சொல்லி விட்டுச் சென்றுகொண்டே இருக்கின்றனர். இக் குழறு படைகளுக்குக் காரணம், பிற்காலத்தில் வடமொழியில் இசைநூல்களை இயற்றிய ஆசிரியர்களின் கலப்பால் பண்டைய தமிழ்ப் பண்களின் இயலறிவு குன்றினமையேயாம். பிங்கல முனிவர் சொல்லியிருக்கும் பண்களுக்கும் (இராகங்களுக்கும்) பெயரிலும், தொகையிலும், வித்தியாசம் இருப்பதைக் காண்கின்றோம். சமீப காலத்தில் வெளிவந்துள்ள தேவாரப் புத்தகங்களிலும், சைவசித்தாந்த மகா சமாஜத்தினர் வெளியிட்ட தேவாரப் புத்தகங்களிலும் பதிகங்களின் தலைப்பில் பண்களின் (இராகங்களின்) பெயர்களைமாத்திரம் அச்சிட்டிருக்கின்றார்களே ஒழிய இன்ன தாளமெனத் தெரிவிக்கவில்லை. ஆனால் பிரசங்க மேடையிலும், சைவத் திருக் கூட்டங்களிலும், விழாக்களிலும் நடைபெறும் சொற்பொழிவுகளில் பேரறிஞர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத் தாளம் தந்த அற்புதத்தை அவர்தம் திருப்பதிகங்களைக் கொண்டே ஆதாரங்களோடும், மிகத் திறமையோடும், ஆர்வத்தோடும் பிரசங்கம் செய்கின்றார்கள். இவ்விதம் கூறவந்த பெரியார்கள் பிங்கலநிகண்டிலும், திருமுறை கண்ட புராணத்திலும் அதிகமான பண்களின் வகைகளை ஆராய்ந்து அதற்கேற்பத் தாளத்தோடுஅமைத்து அச்சிட்டு உதவின் தேவாரங்கள் மிகவும் விளக்கமடையும்.

இனியேனும் தேவாரம் பாடும் இசைவாணர்களில் தக்கவர்களைக்கொண்டு கலந்து, மறைந்துபோகும் பண்களை (இராகங்களை)த் தமிழிசை இலக்கண முறைக்கு ஏற்றவாறு இசை தாள வகைகளை அமைத்து. ஏழிசைக் குறியீட்டெழுத்துக்களை (சுரங்களை)ப் பாவடியின் கீழ்ப் பதித்து இசைப்புலவர்களுக்கும், இசை பயில்வோர்க்கும் பயன்படும்படி வெளியிடுமாறு பெரியோர்களை வேண்டுகின்றனன்.

தேவாரம் பாடும் தெய்விக உரிமை ஓதுவார், தேசிகர் எனச் சொல்லும் கூட்டத்தாருக்கே உண்டு எனச் சிலர் நினைக்கின்றனர்.

அது பேதமையேயாகும். தேவாரத்தை இயற்றிய ஆசிரியர்களின் கருத்து அவைபல்லோராலும் பாடப்படவேண்டுமென்பதேயாகும்

தமிழ் மறைகள் ஆரியவேதம் போல உலகியல்பற்றி ஒரு சிலர்க்கே உரியவாதலின்றி மெய்ந்நெறியுணர்த்தி விழுப்பயன் தருதல்பற்றி எல்லோர்க்கும் ஒப்ப உரிமையுடைச் சிறப்பின என்பது,

"செய்யமாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்:
வேத மோதின் மெய்ப்பயன் அறமே."

என்பது முதலாக ஆன்றோரோதியவாறு பற்றித் தெளியப்படும்.

கலைவளர்ச்சிக்கு ஏற்பன செய்தற்கண் சாதி வேற்றுமை முதலியன கருதாது செய்தலே அறிவுடையவர்களின் கடமையாகும். முற்காலத்தில் செல்வர்களும், அரசர்களும் சாதி வேற்றுமையின்றிப் புலவர்களை நன்கு மதித்தும் ஆதரித்தும் வந்தமையாலன்றோ தமிழ்மொழியின்கண் பல கலைகளும் வளர்ச்சியடைந்திருந்தன? சாதி சமய வேற்றுமை கருதாமல் ஆதரவுபுரியும் உயர்திரு வள்ளல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களைத் தமிழுலகம் பின்பற்றவேண்டும். அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது. அவரே போன்று ஆதீன மடாதிபதிகளும், செல்வர்களும், மற்றைய அன்பர்களும் சாதி வேற்றுமையின்றிக் கலைகளை வளர்ச்சியுறச் செய்வார்களேயானால் நம் நாடு பண்டைய நாட்களிற்போலச் சிறப்புடன் திகழும் என்பதில் ஐயமில்லை.

நிற்க; இந்நூலிற்கு மதிப்புரையொன்று தரும்படி தேவாரமணி திருவாளர் ஆ. விநாயக முதலியார் அவர்கள் என்னை விரும்பினர் கள். இந்நூலில் உள்ள விஷயங்களை ஊன்றிக் கவனித்தேன்.

மறைந்துகிடக்கும் தேவாரத் திருப்பதிகங்களை இசை இலக்கண வரம்பறிந்து பல்வேறு திறப்பட இன்னிசை தழுவிப் பாடவேண்டும் என வற்புறுத்தி அவர்கள் முகவுரையில் தெரிவித்திருக்கின்றார்கள். திரு. முதலியார் அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்தை முழு மனதோடு ஆதரிக்கின்றேன். பழந்தமிழ்ப் பண்களின் பெயர்கள் பிறர் கலப்பால் மாற்றப்பட்டுப் பிற பெயர்களுடன் பன்னூட்களுக்கு முன்பிருந்து வழங்கி வந்துவிட்டபடியால் தமிழிசையின் உண்மை உருவம் அறியக்கூடவில்லை. ஆயினும் இப்போதுள்ள பண்டைய நூல்களின் ஆதாரங்களினால் சீர்திருத்தம் செய்துகொள்ளலாம்.

பொதுவாகத் தமிழிசை இலக்கண முறைக்கு வரும் பண் திறங்களில் (ஜன்ய ராகங்களில்) புதுப்பித்து இசைக்கேற்பத் தாளம் அமைத்து எளிய முறையில் நமது இசை உலகிற்கு இந்நூலாசிரியர் திருப்பதிகங்களை உதவியது மிகவும் பாராட்டத் தக்கதாகும். உண்மையான எண்ணத்துடன் இந்நூலாசிரியர் தெரிவித்திருக்கும் விஷயங்கட்கு என் மதிப்புரை வேண்டியதில்லை என்று சொல்லியும், அவர்கள் விருப்பத்திற்கிணங்கி முழுஅன்புடன் இம்மதிப்புரையைத் தந்தேன்.

இந்நூலின் நுட்பத்தை உணராமல் முன்னுக்குப்பின் முரணான வார்த்தைகள் சிலர் பேசக்கூடும். ஆனால் நடுநிலை நின்று காண் போர்க்கு உண்மை விளங்காமற்போகாது. இந்நூலில் வெளியிட்டிருக்கும் தேவாரத் திருப்பதிகங்களுக்கு அமைத்த இராக தாள சுர அமைப்புப் போலவே ஏனைய தேவாரத் திருப்பதிகங்களுக்கும் அமைத்து இசை உலகத்திற்கு உதவிசெய்யும்வண்ணம் இந்நூலாசிரியருக்குஉடல் நலமும், கலை வளர்ச்சியும், நீண்ட ஆயுளும், பிற நலங்களும் நல்குமாறு எமதிறைவன் முருகப் பெருமான் அருள்புரிவாராக.

இப்படிக்கு,
வேலூர், தேவாரம்-திருப்புகழ்
T. A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார்.

பிழை திருத்தம்

இப்புத்தகத்தைப் படிக்கத் தொடங்குமுன் பின்வரும் பிழைகளைத் திருத்திக்கொள்க.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
18	11	எழு	ழெழு
24	4	ச்நிதநிபமரிச	ச்நிபமரிச
27	27	அணைய	அணைய
34	17	ச்நி*	சநி*
35	15	கிரீ	நிரீ
35	15	தகிரி	தநிரி
38	5	*சா	*சா
38	5	சா i	சா i
38	19	சா i	சா i

இப் புத்தகத்தில் உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்கள்

ஆரோ = ஆரோகணம். அவ = அவரோகணம்.

i இது தாள முடிவை (ஓர் ஆவிருத்தின் முடிவை)க் குறிக்கும்.

, இது தாளத்தில் ஓர் அக்ஷர காலத்தைக் குறிக்கும்.

—— இது மத்யமகாலம் அதாவது வேக காலத்தைக்குறிக்கும்.

. இந்தப் புள்ளி ஸ்வரங்களின் மேல் இருந்தால் மேல் ஸ்தாயியையும், ஸ்வரங்களின் கீழிருந்தால் கீழ் ஸ்தாயியையும் காண்பிக்கும். மேல்ஸ்தாயி என்பது தார ஸ்தாயி யென்றும், கீழ்ஸ்தாயி என்பது மந்தர ஸ்தாயியென்றும் சொல்லப்படும்.

~~~ இந்தக் குறி ஸ்வரங்களின் மேலிருந்தால் கமக மாக அசைத்துப் பிடிக்கவும்.

( ) இந்த இரண்டு வளைவுகளுக்குள் வரும் ஸ்வரத்தை அனுஸ்வரமாகப் பாடிக் கொள்ளவேண்டும். தாளத்தில் இதற்கு மாத்ரா காலம் கிடையாது.

ஸரிகமபதநி ஸ்ரிஸ்ா __ இப்படி ஸ்வரங்கள் மேலும், ஸாஹித்யம் தருவா யே கீழும் வந்தால், தருவா அ அ அ அ என்று எழுத்தின் ஓசையைத் தொடர்ந்து நீட்டி ஒலிப்பதாகும். இம்மாதிரியே மற்ற சந்தர்ப்பங்களிலும் தெரிந்து உபயோகப்படுத்திக் கொள்க.

ஸ்வர அக்ஷர காலங்கள்:— ஒரு குறில் ஸ்வரத்திற்கு ஒரு அக்ஷர காலம். ஒரு நெடில் ஸ்வரத்திற்கு இரண்டு அக்ஷர காலம். நெடிலுக்கு இரண்டு குறில் சமம். சாஹித்தியத்தின் இரண்டு குறில்களுக்கு ஸ்வரத்தில் ஒரு நெடில் இருக்கலாம். ஸ்வரம் நெடிலாக இருந்தால் கீழ் உள்ள விதியை உபயோகிக்க.

காரி — } இம்மாதிரியாக ஸ்வர ஸாஹித்யம் வரும்பொழுது மாணி
மணி — } என்று உச்சரிப்பு வாரதபடி மணி என்னும் பதம் அதிகமாக வாய் திறந்து உச்சரிக்காமல் குறில் உச்சரிப்பாகவே உச்சரித்தால் மூன்று அக்ஷர காலம் தவறாது வருவதோடு, இசையின் இனிமையும் குறையாமல் வரும்.

* இக்குறி தாளத்திலுள்ள பாட்டின் எடுப்பைக் காண்பிக்கும்.
~~~

72 கர்த்தாராகங்களில் 32 கர்த்தாராகங்களே மனசாக்ஷிக்கும் அநுபவத்திற்கும் பொருத்தமாகவுள்ளனவாகும். தற்காலம் 32 கர்த்தா ராகங்களே யாவரும் வழக்கத்தில் பாடி வருகின்றார்கள். அதன் விளக்கம் கீழே காண்க.

32 கர்த்தா ராகங்களும் ஒவ்வொன்ருக அடியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கர்த்தாராகங்கள் என்பன சம்பூரண ராகங்கள். ஒவ்வொரு ஸ்வரத்தின் பக்கத்தில் நெம்பர் ஒன்று (1) என்கின்ற குறி இருந்தால் சுத்தஸ்வரம் என்றும், நெம்பர் இரண்டு (2) என்கின்ற குறி இருந்தால் பிரதிஸ்வரம் என்றும் சுலபமாகத் தெரிந்துகொள்க.

ஸ	—	என்பது	பேதமில்லை
1ரி	—	,,	சுத்த ரிஷபம்.
2ரி	—	,,	பிரதி ரிஷபம். (சதுஸ்ருதி ரிஷபம்)
1க	—	,,	சுத்த காந்தாரம். (சாதாரண காந்தாரம்)
2க	—	,,	பிரதி காந்தாரம். (அந்தர காந்தாரம்)
1ம	—	,,	சுத்த மத்திமம்.
2ம	—	,,	பிரதி மத்திமம்.
ப	—	,,	பேதம் இல்லை.
1த	—	,,	சுத்த தைவதம்.
2த	—	,,	பிரதி தைவதம். (சதுஸ்ருதி தைவதம்)
1நி	—	,,	சுத்த நிஷாதம். (கைஸிகி நிஷாதம்)
2நி	—	,,	பிரதி நிஷாதம். (காகலி நிஷாதம்)

மேற் காட்டிய மாற்றுப் பெயருடன் வழங்கிவரும் பன்னிரண்டு ஸ்வரங்களை சுத்தம் பிரதி என்றே வழங்கிக்கொள்க.

சுத்த மத்திம ராகங்கள் 16.

1.	அநுமத்தோடி.	(ஸ)	1ரி.	1க.	1ம.	(ப)	1த.	1நி.	(ஸ்)
2.	நடபைரவி.	,,	2ரி.	1க.	1ம.	,,	1த.	1நி.	,,
3.	வகுளாபரணம்.	,,	1ரி.	2க.	1ம.	,,	1த.	1நி.	,,
4.	சாருகேசி.	,,	2ரி.	2க.	1ம.	,,	1த.	1நி.	,,

5.	நாடகப்பிரியா.	,,	1ரி.	1க.	1ம.	,,	2த.	1நி.	,,
6.	கரகரப்பிரியா.	,,	2ரி.	1க.	1ம.	,,	2த.	1நி.	,,
7.	சக்கரவாகம்.	,,	1ரி.	2க.	1ம.	,,	2த.	1நி.	,,
8.	ஹரிகாம்போதி	,,	2ரி.	2க.	1ம.	,,	2த.	1நி.	,,
9.	தேனுகா.	,,	1ரி.	1க.	1ம.	,,	1த.	2நி.	,,
10.	கீரவாணி.	,,	2ரி.	1க.	1ம.	,,	1த.	2நி.	,,
11.	மாயாமாளவகௌள	,,	1ரி.	2க.	1ம.	,,	1த.	2நி.	,,
12.	சரசாங்கி.	,,	2ரி.	2க.	1ம.	,,	1த.	2நி.	,,
13.	கோகிலப்பிரியா	,,	1ரி.	1க.	1ம.	,,	2த.	2நி.	,,
14.	கௌரிமனோகரி.	,,	2ரி.	1க.	1ம.	,,	2த.	2நி.	,,
15.	சூரியகாந்தம்	,,	1ரி.	2க.	1ம.	,,	2த.	2நி.	,,
16.	தீரசங்கராபரணம்.	,,	2ரி.	2க.	1ம.	,,	2த.	2நி.	,,

பிரதி மத்திம ராகங்கள் 16.

1.	பவப்பிரியா.	(ஸ)	1ரி.	1க.	2ம.	(ப)	1த.	1நி.	(ஸ்)
2.	ஷண்முகப்பிரியா	,,	2ரி.	1க.	2ம.	,,	1த.	1நி.	,,
3.	நாம நாராயணி	,,	1ரி.	2க.	2ம.	,,	1த.	1நி.	,,
4.	ரிஷபப்பிரியா.	,,	2ரி.	2க.	2ம.	,,	1த.	1நி.	,,
5.	ஷட்விதமார்க்கிணி.		1ரி.	1க.	2ம.	,,	2த.	1நி.	,,
6.	ஏமவதி.	,,	2ரி.	1க.	2ம.	,,	2த.	1நி.	,,
7.	ராமப்பிரியா.	,,	1ரி.	2க.	2ம.	,,	2த.	1நி.	,,
8.	வாசஸ்பதி.	,,	2ரி.	2க.	2ம.	,,	2த.	1நி.	,,
9.	சுப பந்துராவளி	,,	1ரி.	1க.	2ம.	,,	1த.	2நி.	,,
10.	ஸிம்மேந்திர மத்திமம்.		2ரி.	1க.	2ம.	,,	1த.	2நி.	,,
11.	காமவர்த்தனி.	,,	1ரி.	2க.	2ம.	,,	1த.	2நி.	,,
12.	லத்தாங்கி.	,,	2ரி.	2க.	2ம	,,	1த.	2நி.	,,
13.	சுவர்ணாங்கி.	,,	1ரி.	1க.	2ம.	,,	2த.	2நி.	,,
14.	தர்மவதி.	,,	2ரி	1க.	2ம.	,,	2த.	2நி.	,,
15.	கமனஸ்ரயா.	,,	1ரி.	2க.	2ம.	,,	2த.	2நி.	,,
16.	மேச்சகல்யாணி	,,	2ரி.	2க.	2ம.	,,	2த.	2நி.	,,

சுத்த மத்திம ராகம் 16. பிரதி மத்திம ராகம் 16.
ஆக 32 கர்த்தாராகங்கள்.

இப் புத்தகத்திலுள்ள பாடல்களுக்கு அமைத்துள்ள ஜன்ய ராகங்களின் ஸ்வரங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்காக அதன் கர்த்தா ராகங்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஏழு தாளங்கள் ஐந்து ஜாதியால் 35 தாளமாகின்ற விவரம்.

அங்க கணக்கு	ஸப்த தாளத்தின் பெயர்
|	ஏகம்
0|	ரூபகம்
|U0	ஜம்பெ
|00	த்ரிபுடை
|0|	மட்யம்
||00	அடம்
|0||	த்ருவம்

ஐந்து ஜாதிகளின் பெயர்.		அக்ஷரம்.
திஸ்ரம்	....	3
சதுரஸ்ரம்	....	4
கண்டம்	....	5
மிஸ்ரம்	....	7
ஸங்கீர்ணம்	....	9

அங்கத்தின் பெயர்	அங்க குறி	அக்ஷரம்.
அனுத்ருதம்....	◡	|
த்ருதம்	O	2
இலகு	|	4

	திஸ்ரம்	சதுரஸ்ரம்	கண்டம்	மிஸ்ரம்	ஸங்கீர்ணம்
ஏகம் ஐந்து	3	4	5	7	9
ரூபகம் ஐந்து	5	6	7	9	11
ஜம்பெ ஐந்து	6	7	8	10	12
த்ரிபுடை ஐந்து	7	8	9	11	13
மட்யம் ஐந்து	8	10	12	16	20
அடம் ஐந்து	10	12	14	18	22
த்ருவம் ஐந்து	11	14	17	23	29

கவனிப்பு:—

ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு சுரங்களின் பெயர் பண்டைத் தமிழ்ப் பெயரேயாகும். சமஸ்கிருதப் பெயரல்ல என்பதைப்பற்றி சில நூல்களின் ஆராய்ச்சியினால் மிகத் தெளிவாக விளங்குவதோடு சில ஆதாரங்களும் கிடைக்கின்றன. ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு சுரங்களின் பெயர்களும் முதல் முதல் தமிழ்மொழியிலேயே வழங்கி வந்தனவென்றும் சில நூல்களினால் தெரியவருகின்றது. உதாரணமாக:- சிகண்டிமா முனிவர் சொன்ன வெண்பாவே அத்தாட்சியாகும்.

ச ரி க ம ப த நி யென்றே எழுத்தாற்றானம்
வரி பரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ் முதலாஞ் சுத்தத் துளை.

சமஸ்கிருத எழுத்துக்களின் ஓசையைப் போல் தமிழ் எழுத்துக்களிலும் உண்டென்பதைப்பற்றி தமிழ் இலக்கண நூல்களிலும், தஞ்சை ஆபிரகாம் அவர்கள் எழுதிய கருணாமிர்த சாகரம் என்னும் நூலிலும் மிகத் தெளிவாகக் காணலாம்.

பண்டைய தமிழ் பண்களின் பெயர்கள் மாற்றுப் பெயருடன் தற்காலம் வரையில் வழங்கிவந்திருக்கின்றன.

பண்டைய தமிழ் நூல்களிலுள்ள இசைக்குறிப்புகள்:—

வடமொழியில் ச—என்பதற்கு ஷட்ஜயம் தமிழில் குரல் என்றும்

,,	ரி—	,,	ரிஷபம்	,,	துத்தம்	,,
,,	க—	,,	காந்தாரம்	,,	கைக்கிளை	,,
,,	ம—	,,	மத்திமம்	,,	உழை	,,
,,	ப—	,,	பஞ்சமம்	,,	இளி	,,
,,	த—	,,	தைவதம்	,,	விளரி	,,
,,	நி—	,,	நிஷாதம்	,,	தாரம்	,,

சுரத்தின் பெயர் ஏழு என்பதற்கு தமிழரின் பண்டைய நூல்களில் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆரோகணம்	என்பதற்கு	தமிழில்	ஆரோசை
அவரோகணம்	,,	,,	அமரோசை
சம்பூரணம்	,,	,,	பண் (பெரும் பண்)
சாடவம்	,,	,,	பண்ணியல்
ஔடவம்	,,	,,	பண்ணின் திறம்
சுராந்தியம்	,,	,,	பண்ணின் திறந்திறம்

கீழ் உள்ள இசைக்குறிப்புகள் பண்டைய தமிழ் நூல்களில் உள்ளது:—

"பாவோ டணைத லிசை யென்றூர் பண்ணென்றூர்
மேவார் பெருந்தான மெட்டானும்—பாவா
யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்றுபார்"

இசையின் பெருந்தானமான நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணக்கு, உதடு, பல்லு, தலை, முதலியவைகளாலும், எடுத்தல், படுத்தல், நளிதல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு, கம்பித முதலிய எட்டு வகைக் கிரியைகளாலும் பிறந்து பண்ணப்படுவதால் பண்ணென்பது.

பண்ணிசையாழின் ஸ்வர வரிசைகள்:—

ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	ச

பன்னிரு சுரங்களும் இசைநூல் வழக்கப்படி:—

"குன்றுக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்றூர்ந்த மங்கரந் தவ்வொடு—நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
ஆளத்தி யாமென்றறி"

நிர்ணயித்த ஆதார சுதியும், அதற்கு பஞ்சமும், குறிலான ரிகம தநி ஐந்தும், நெடிலான ரிகமதநி ஐந்தும், ஆகப் பன்னிரண்டையும் 'சரிகம பதநி' என ஏழு சுர சம்பூரணமாகக் கண்டு ஆளத்திற்கு வரப்பெறுவது என்று தெரிந்துக் கொளல் வேண்டும். ஆளத்தி என்பது ஆலாபனம் என்பது. ஆதலின் முத்தமிழும் முழங்கிய பண்டையத்தமிழக நாகரிகமும் குழலினும் யாழினும் குரல் முதலேழும் வழுவின்றிசைத்து வழித்திறங்காட்டும் அரும் பெருஞ் சிறப்பும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்முறை வழி சென்ற மூதறிவாளர்கள் ஆற்றல்களால் நமக்குக் கிடைத்துள்ள பண்டைய தமிழ் நூல்களை ஆராய்ந்து கண்டறியாமல் நாம் விட்டு விட்டது நம்முடைய குற்றமாகும். மேலும் ஆதியில் நம் நாட்டில் இருந்த இசை முறை மாறுபட்டு, பலவித காரணக் கலப்பால் வேறுபாட்டைப் பெறலாயிற்று. தற்கால அநுபவத்தில் கிடக்கும் சங்கீத மொழிகளின் வழியேதான் நாமும் செல்ல வேண்டியதாக வந்ததே யொழிய நம் முறைகள் ஒழுங்காகவே இருக்கின்றன.

தேவாரப் பதிகங்களை இசையுடன் பாடவேண்டும் என்பதற்கு, தேவாரப்பதிகங்களிலுள்ள பின்வரும் தொடர்களே அதற்குச் சான்றாகும் —

'ஞான சம்பந்தனது சொல் முந்தியிசை செய்து மொழிவார்கள்'
'புணர்ந்த தமிழ் பத்தும் இசையால் உரை செய்வார்'
'ஞானசம்பந்தன் பரிந்துரைத்த பத்தும் ஏத்தி இன்னிசையாற் பாடவல்லார்'
'தமிழ் மாலைகள் இசையோடிவை பத்தும்பகரும் அடியவர்கட்கு'
'பண்ணிசையால் ஏத்திப்பயின்ற இவைவல்லார்'
'ஈனமிலாத வண்ணம் இசையால் உரைத்த தமிழ்மாலை'
'ஞானசம்பந்தன் சொன்ன பண்ணமர் பாடல் வல்லார்'
'ஞானசம்பந்தன் சொன்ன இன்னிசை பத்தும் வல்லார்'
'ஞானசம்பந்தன் சொன்ன பண்புனை பாடல்'
'இன்னிசை செய் ஞானசம்பந்தன் மொழிகள்'
'சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன்'

மேற்காட்டியவைகளாலே தேவாரம் இசைத்தமிழ் என்பது யாவருக்கும் மிக விளங்கும் இன்னும் இசையைப்பற்றின ஆதாரங்கள் தேவாரப்பதிகங்களில் அநேகம் காணக்கிடக்கின்றன.

உ
சிவமயம்
திருவேகம்பநாதன் துணை

தேவாரத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய பாடல்கள்

1. பண்: சுத்த தன்யாசி. தாளம்: திஸ்ரஜாதி ரூபகம்.

0² |³

நட பைரவியில் ஜன்யம் { ஆ: சகம பநிச / அ: சநிப மகச }

1. , , *ப ம | பா , , பா i மா , , | மா ப ம க ச i
மறை யா ளொ மா சி லா

2. கம* ப ம | ப நி ப ம பா i மா ப ம மா | மா ப ம க ச i
மறை யா ளொ மா சி லா

க ம பா | ப ம க ம பா i ப நி ச் நி | ப ம ப ம க ச i
புன் ச டை மல் கு வெண்

1. கம* ப ம | நி ப ம க சா i ச க ம க | ச நி ப நி சா i
பிறை யா ளொ பெண் ணொ டு

சக மா | ப ம க ம பா i ப நிச் க் | ச் நி ப ம க ச i
ஆ ணு கிய பெம் மா ளொ

1. கம* ப நி | ச் நி ப ம பா i ப நி ச் க் | ச் நி ச்ா ச்ா i
இறை யா ளொ யே ர் கொள்

, , *ப நி | ச்ா, க் ச்ா i ப நி ச் க் | ச் நி ச் நி ப ம i
கச் சி த்திரு ஏ கம் ப த்து

2. ப நி* ச் நி | ச் நி ப ம பா ¡ ப நி ச் க் | ம் க் ச் நி சா ¡
இறை யா னை யே ர் கொள்

, , *ப நி | ச்ா , க் ச்ா ¡ ப நி ச் க் | ச் நி ச் நி ப ம ¡
கச் சி த்திரு ஏ கம் ப த்து

1. ப நி* ச் க் | ம் க் ச் நி சா ¡ ப நி ச் க் | ச் நி ப ம பா ¡
உறை வா னை அல் ல து

ப ம ப நி | ச் நி ப ம பா ¡ ப நி ச் நி | ப ம ப ம க ச ¡
உன் கா தென துள் ள மே

